www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

T

தூத்துக்குடி மாவட்டம்

# முதல் இடைப்பருவத் தேர்வு - 2024

## ஏழாம் வகுப்பு

நேரம்: 1.00 மணி | தமிழ் | மதிப்பெண்கள்: 30

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடு:-** **5×1=5**

1) 'நெறி' என்னும் சொல்லின் பொருள் ________
அ) வழி ஆ) குறிக்கோள் இ) கொள்கை ஈ) அறம்

2) வானில் ________ கூட்டம் திரண்டால் மழை பொழியும்
அ) அகில் ஆ) முகில் இ) துகில் ஈ) துயில்

3) தமிழின் கிளைமொழிகளுள் ஒன்று ________
அ) உருது ஆ) இந்தி இ) தெலுங்கு ஈ) ஆங்கிலம்

4) ஆசிய யானைகளில் ஆண்-பெண் யானைகளை வேறுபடுத்துவது ________
அ) காது ஆ) தந்தம் இ) கண் ஈ) கால் நகம்

5) நாவற்பழத்திற்கு உவமையாகக் கூறப்படுவது ________
அ) பச்சை இலை ஆ) கோலிக்குண்டு இ) பச்சைக்காய் ஈ) செங்காய்

**ஆ) எவையேனும் மூன்று வினாக்களுக்கு ஓரிரு சொற்களில் விடையளி.** **3×2=6**

6) தமிழ்மொழியைக் கற்றவரின் இயல்புகளை எழுதுக.
7) மொழியின் இரு வடிவங்கள் யாவை?
8) குற்றியலிகரம் என்றால் என்ன?
9) காடு - வரையறுக்க
10) வாழும் நெறி யாது?

**இ) எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஓரிரு தொடர்களில் விடையளி.** **2×3=6**

11) 'எங்கள் தமிழ்' பாடலில் நாமக்கல் கவிஞர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
12) பேச்சுமொழிக்கும், எழுத்துமொழிக்கும் இடையே உள்ள வேறுபாடுகளுள் மூன்றினை விளக்குக
13) புலிகள் குறித்து நீங்கள் அறிந்து கொண்ட செய்திகளைத் தொகுத்து எழுதுக.

**ஈ) பின்வரும் மனப்பாடப் பகுதியை அடிபிறழாமல் எழுதுக:-** **1×3=3**

14) 'பச்சை மயில் நடிக்கும் .......பூங்குயில் கூவுமடி (காடு)

**உ) அனைத்து வினாக்களுக்கும் விடையளி:-** **5×1=5**

15) பிழையைத் திருத்துக:- கோவலன் சிலம்பு விற்கப் போனான்
16) தொகைச் சொல்லை விரித்து எழுதுக:- முத்தமிழ்
17) பிரித்து எழுதுக:- i) குரலாகும் ii) பெயரறியா
18) எண்ணுப்பெயரின் மாத்திரை அளவைக் கண்டுபிடி:- ஒன்று
19) கலைச்சொல் தருக: i) Media ii) Island

**ஊ) ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளிக்க:-** **1×5=5**

20) நீங்கள் சென்று வந்த சுற்றுலா குறித்து உங்கள் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.
21) குறிப்புகளைப் பயன்படுத்தி 'தாய்மொழிப் பற்று' என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக. முன்னுரை - மொழி பற்றிய விளக்கம் - தாய்மொழி - தாய்மொழிப் பற்று- தாய்மொழிப் பற்றுக் கொண்ட சான்றோர் - சாதுவன் வரலாறு - நமது கடமை- முடிவுரை

********

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com